**S.C.No.163/2018**

**எதிரிகள் 1 முதல் 5 மற்றும் 8 மற்றும் 9 வரையிலான எதிரிகள் ஆஜர். 6 மற்றும் 7வது எதிரி ஆஜரில்லை, மனு தாக்கல் செய்யப்பட்டு மனு அனுமதிக்கப்பட்டது.**

**அ.சா.1 திருமதி. சுசீலா, க/பெ. ஜெகநாதன்**

**தேதி-21.11.2025**

**அ.சா.1 இன்று மீண்டும் அழைக்கப்பட்டு 1 முதல் 6வது எதிரிகள் தரப்பில் தொடர்ந்து குறுக்கு விசாரணை செய்யப்படுகிறார்.**

**1 முதல் 6வது எதிரிகள் தரப்பு குறுக்கு விசாரணை தொடர்ச்சி-**

நான் ஏற்கனவே நீதிமன்றத்தில் இங்கு சாட்சியம் அளித்தேன் என்றாலும், அவ்வாறு முதலிலேயே சாட்சியம் அளிக்கும் போது அமுலரசி என்பவர் என்னிடம் எதற்கு ஜட்டியுடன் வந்து சண்டை போடுகிறாய், அதற்கு ஞானவேல் ஜட்டியுடன் உன்னிடம் தான் வரப்போகிறேன் என்று சொல்லிக் கொண்டு வந்து என்னுடைய முடியை பிடித்தார் என்று புகாரிலும் போலீசாரிடம் நான் கொடுத்த வாக்குமூலத்திலும் சொல்லவில்லை என்றால் சரியல்ல.

அமுலரசி, நவநீதம், தீபா ஆகியோர் என் தலை முடியை பிடித்து இழுத்தார்கள் என்றும், முடியை பிடித்து இழுக்கும் போது என் மருமகள் 7 மாத கர்ப்பிணியாக உள்ளார் என்றும், அவர் வந்து தடுத்தார் என்றும், அதற்கு பின்னால் என் மகன் பணியை முடித்துவிட்டு வந்தார் என்று முதல் விசாரணையில் கூறியுள்ள தகவலை புகாரிலும் போலீசாரிடம் நான் கொடுத்த வாக்குமூலத்திலும் சொல்லவில்லை என்றால் சரியல்ல. 8 பேரும் என் மகனை அடித்து ரத்த வெள்ளத்தில் என் மகன் கீழே விழுந்துவிட்டார் என்று முதல் விசாரணையில் கூறியுள்ள தகவலை புகாரிலும் போலீசாரிடம் நான் கொடுத்த வாக்குமூலத்திலும் சொல்லவில்லை என்றால் சரியல்ல.

என் மகனுக்கு 8 தையல் போட்டார்கள் மற்றும் எனக்கு 6 குளுக்கோஸ் போட்டார்கள் என்று நான் ஏற்கனவே நீதிமன்றத்தில் என்னுடைய விசாரணையில்

சொல்லியுள்ளேன், அவ்வாறு சொன்ன தகவலை என் புகாரிலோ, போலீசாரிடம் நான் கொடுத்த வாக்குமூலத்திலோ சொல்லவில்லை என்றால் சரியல்ல. எனக்கு எழுதவோ படிக்கவோ தெரியாது என்றால் சரிதான், கையெழுத்து மட்டும் போடுவேன். எதிரிகள் என் மகனின் இரு சக்கர வாகனத்தினை ஒலியை கேட்டு மீண்டும் எங்கள் வீட்டிடம் வந்துவிட்டார்கள் என்றும், என் மகன் தூசி காவல் நிலையத்திற்குச் சென்று புகார் கொடுத்துவிட்டு வருகிறேன் என்று சொல்லிவிட்டு சென்றார் என்றும், பின்னிட்டு என் மகன் வீட்டிற்கு வரவில்லை என்று முதல் விசாரணையில் சொல்லியுள்ள தகவலை என் புகாரிலோ, காவல் துறையில் என்னிடம் விசாரித்த போதோ சொல்லவில்லை என்றால் சரியல்ல, நீங்கள் சொல்வது எல்லாம் தவறு.

நான் அளித்த புகாரிலோ காவல் துறையினர் என்னை விசாரித்த போதோ காவாங்கரையில் என் மகன் அய்யோ அய்யோ என் உயிர் போகிறது என்னை காப்பாற்றுங்கள் காப்பாற்றுங்கள் என்று என் மகன் சத்தம் போட்டதை முதல் விசாரணையில் கூறியுள்ள சங்கதிகளை என் புகாரில் சொல்லவில்லை என்றால் சரியல்ல, நீங்கள் சொல்வது பொய். நான் சென்று பார்க்கும் போது அங்கு மொத்தம் எத்தனை இரு சக்கர வாகனங்கள் இருந்தது என்றால் மொத்தம் 3 இரு சக்கர வாகனங்கள் இருந்தது, அதில் என் மகனின் இரு சக்கர வாகனமும் ஒன்று.

நான் என் மகனின் பெயரை கூறிக் கொண்டே சென்ற போது அங்கு இருந்த எதிரிகளின் மூன்று இரு சக்கர வாகனங்களில் லைட் எரிந்துக் கொண்டிருந்த வெளிச்சத்தில் பார்த்தேன் என்றும், அந்த லைட் வெளிச்சத்தில் பார்த்த போது நான் விஜி ஓடி வா டா என்று சொல்லிக் கொண்டு சென்றுக் கொண்டிருக்கும் போதே, என் மகனை பார்ப்பதா, எதிரிகளை பிடிப்பதா என்று கத்திக் கொண்டிருந்தேன் என்றும், எதிரிகள் அங்கிருந்து பைக்கில் புதுப்பாளையம் சென்று புதுப்பாளையம் காந்தி என்ற உறவினர் வீட்டிற்குச் சென்றுவிட்டு, வண்டிகளை விட்டு விட்டு ஆற்றின் குறுக்கே சென்று கருவேப்பம்பூண்டி என்ற ஊருக்குச் சென்றுவிட்டார்கள் என்று முதல் விசாரணையில்

கூறியுள்ள சங்கதிகளை புகாரிலோ, காவல் துறையில் என்னிடம் விசாரித்த போதோ சொல்லவில்லை என்றால் சரியல்ல, நான் சொன்னேன்.

ஆம்புலன்சில் என் மடியில் என்னிடம் பேசிய நிலையில் அம்மா என்று என் மகன் என்னை அழைத்தார் என்று முதல் விசாரணையில் கூறியுள்ள சங்கதிகளை புகாரிலோ, காவல் துறையில் என்னிடம் விசாரித்த போதோ சொல்லவில்லை என்றால் சரியல்ல, நான் சொன்னேன். ஆம்புலன்சில் என் மகனை காஞ்சிபுரம் மருத்துமனைக்கு ஏற்றிச் சென்றார்கள், நான் பின்னிட்டு இரு சக்கர வாகனத்தில் அன்று இரவே காஞ்சிபுரம் மருத்துவமனைக்குச் சென்றுவிட்டேன் என்றால் சரிதான். நானும் ஆம்புலன்சும் தூசி வழியாக தான் காஞ்சிபுரம் மருத்துவமனைக்குச் சென்றோம் என்றால் சரிதான்.

காஞ்சிபுரம் மருத்துவமனைக்குச் செல்லும் வழியில் தான் தூசி காவல் நிலையம் உள்ளது என்றாலும், ஆம்புலன்சை நிறுத்தி விட்டு வழியில் உள்ள தூசி காவல் நிலையத்தில் தகவல் சொன்னோம் என்றாலும், அவர்கள் ஆம்புலன்சை அனுப்பி விட்டார்கள் என்றாலும் சரிதான். சிவா என்பவர் என்னை எங்கள் ஊரிலிருந்து அன்று இரவே தூசி காவல் நிலையத்திற்கு அழைத்துச் சென்றுவிட்டார் என்றால் சரிதான். தூசி காவல் நிலையத்தில் போலீசார் இருந்தார்கள் என்றாலும், அங்கு என்ன நடந்தது என்று நான் சொன்னேன் என்றாலும், அங்கு இருந்த போலீசார் நான் சொன்னதை எழுதிக் கொண்டு என்னிடம் கையொப்பம் பெற்றுக் கொண்டு என்னை காஞ்சிபுரம் மருத்துவமனைக்குச் செல்ல அறிவுறுத்தினார்கள் என்றாலும் சரிதான்.

மருத்துவமனைக்கு நான் சென்றவுடன் என் மகன் இறந்துவிட்டதாக எனக்கு தகவல் கிடைத்தது என்றால் சரிதான். மருத்துவமனைக்கு அன்று இரவு நான் போனேன் அங்கு என் மகனின் பிரேதத்தை எப்போது என்னிடம் கொடுத்தார்கள் என்றால் மறுநாள் மதியம் 2.00 மணிக்கு கொடுத்தார்கள். மருத்துவமனையில் அட்மிட் ஆனவுடன் என் மகன் இறந்துவிட்டார் என்று தகவல் தெரிவித்த பின்னர் விடியற்காலையில் நான் தூசி காவல் நிலையத்திற்குச் சென்றுவிட்டேன் என்றால் சரிதான்.

நான் விடியற்காலை தூசி காவல் நிலையத்திற்கு வந்தேன், அங்கிருந்த காவலர்கள் எங்கள் ஊருக்கு வந்தனர், நான் நாகப்பன் வீட்டை காண்பித்த போது, வீட்டிலிருந்த நாகப்பனை காவல் துறையினர் அழைத்துக் கொண்டு தூசி காவல் நிலையத்திற்கு அன்று விடியற்காலையிலேயே அழைத்து வந்துவிட்டனர் என்றால் சரிதான். நானும் போலீசாரும் நாகப்பனின் வீட்டிற்குச் சென்ற போது நாகப்பன் அவரது வீட்டில் தான் கட்டிலில் படுத்துக் கொண்டு இருந்தார் என்றால் சரிதான். அவரது மனைவி வீட்டில் தான் இருந்தார் என்றாலும், அவரை காவல் துறையினர் அழைத்து வரவில்லை என்றால் சரிதான்.

மருத்துவமனையில் என் மகன் இறந்துவிட்டார் என் தகவல் தெரிந்தவுடன் காவல் துறையினர் காஞ்சிபுரம் மருத்துவமனைக்கு சம்பவம் நடந்த அன்று இரவே வந்துவிட்டனர் என்றால் சரிதான், 4, 5 போலீசார் வந்தனர். மருத்துவமனையிலேயே வைத்து என்னிடம் போலீசார் எப்படி என் மகன் இறந்துவிட்டார் என்று விசாரணை செய்து அதை எழுதிக் கொண்டு அதிலும் என்னிடம் கையொப்பம் பெற்றுக் கொண்டு பின்னர் தூசி காவல் நிலையத்திற்கு வரச் சொல்லிவிட்டு அவர்கள் சென்றுவிட்டார்கள் என்றால் சரிதான்.

மறுநாள் விடியற்காலையில் நான் தூசி காவல் நிலையத்திற்குச் சென்றேன் என்றாலும், அங்கு எவ்வளவு மணி நேரம் இருந்தேன் என்றால் காலை 7.00 மணிக்கு நாங்கள் காவல் நிலையம் வந்தோம், பகல் 12.00 மணி வரை காவல் நிலையத்தில் நாங்கள் இருந்தோம். என் மகன் விஜயகாந்த் கட்சியில் உறுப்பினராக இருந்தார் என்றால் சரிதான். கட்சி கூட்டத்திற்கு எல்லாம் செல்வார் என்றாலும், அரசியல்வாதிகளை தெரியும் என்றாலும் சரிதான்.

மருத்துவமனையில் இருக்கும் போது தே.மு.தி.க கட்சியிலிருந்த வழக்கறிஞர்கள் அனைவரும் வந்தார்கள் என்றால் சரிதான். காவல் நிலையத்திற்கும் காலையில் 9.00, 10.00 மணியளவில் காஞ்சிபுரம் வழக்கறிஞர் விநாயகமூர்த்தி மற்றும் செய்யாறு வழக்கறிஞர் சரவணன் மற்றும் கட்சியை சேர்ந்த பல வழக்கறிஞர்கள் வந்தனர் என்றால்

சரிதான். அவர்கள் வந்த பின்பு நான் முதல் நாள் காவல் நிலையத்தில் கொடுத்த புகாரையும், மருத்துவமனையில் கொடுத்த புகாரையும் வாங்கி படித்து பார்த்தனர் என்றால் சரிதான். காவல் நிலையத்திற்கு வந்த வழக்கறிஞர்களும் சில எழுதப்படாத வெற்று தாளில் என்னிடம் கையொப்பம் பெற்றனர் என்றால் சரிதான்.

(குறுக்கு விசாரணை தொடர்ச்சிக்காக வழக்கு ஒத்தி வைக்கப்படுகிறது).

Taken down to my dictation in my presence and hearing and under my personal direction and superintendence and interpreted to the witness in the presence of the accused and admitted by the witness to be correct.

Sd./ C. Jayasree,
Additional Sessions Judge,
Arani.